மரம் நடுவோம் சுற்று சூழலை காப்போம்

# தமிழ்நாடு வாகன புகை ஆய்வகங்களின் அசோசியேஷன்

## Tamil Nadu Vagana Pughai Ayvahangalin Association

9, ராஜாசர் முத்தையா நகர், பைபாஸ் ரோடு, பழங்காநத்தம், மதுரை – 625010.

பதிவு எண்.: 127/2006 Ph: 0452-2536450

| மாநில தலைவர் | மாநில செயலாளர் | மாநில பொருளாளர் |
|---|---|---|
| R. ராமகிருஷ்ணன் | M. சத்தியமூர்த்தி | S. நந்தகோபால் |
| Cell: 93633 36450 | Cell: 94437 63807 | Cell: 98947-95275 |


பெறுநர் தேதி: 13. 8. 13

உயர்திரு போக்குவரத்து ஆணையர் அவர்கள்
போக்குவரத்துதுறை,
சேப்பாக்கம்,
சென்னை-600 005.

ஐயா,

பொருள்: புகைபரிசோதனை கட்டணத்தை உயர்த்துதல் சம்மந்தமாக.

- - - - -

இப்பவும் நாங்கள் கடந்த 22.03.2013ம் தேதி தங்களது அலுவலகத்தில் புகை பரிசோதனை கட்டணத்தை உயர்த்துவது சம்மந்தமாக ஆலோசித்தோம். அன்று தாங்கள் விரைவில் ஆவண செய்கின்றேன் என்று கூறியிருந்தீர்கள். ஆனால் இது நாள் வரை எங்களுக்கு எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை. புகைச் சான்றிதழ் வழங்குவதில் நஷ்டம் ஏற்பட்டு வருவதால் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் உள்ளோம்.

வாகன பதிவு சான்றிதழில் ஆணையர் சிவக்குமார் அவர்கள் ஆணையின்படி CMV Rule 115 (7)-ஐ பதிவு செய்யும்படி எல்லா வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியிருந்தார்கள். அதையும் இது நாள் வரை நடைமுறைபடுத்தவில்லை.

ஆகவே மேற்கூறிய இரண்டு வேண்டுதலையும் நிறைவேற்றி எங்களுக்கு ஆவண செய்யும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி,

தலைவர்

நகல்: இணை போக்குவரத்து ஆணையர் (ஆர்.எஸ்.)
துணை போக்குவரத்து ஆணையர்

பெறுநர்

உயர்திரு.போக்குவரத்து ஆணையர் அவர்கள்,
போக்குவரத்தது துறை,
சேப்பாக்கம்,
சென்னை-600005.

ஐயா,

பொருள்- புகைச்சான்றிதழ் கட்டணத்தை உயர்த்துதல், வாகன காப்பீடு புதுப்பிக்கும் பொழுது புகைச்சான்றிதழை கட்டாயமாக்குவது சம்பந்தமாக.

நாங்கள் பலதடவைகளில் ஆணையர் அவர்களை சந்தித்து புகைச்சான்றிதழ் கட்டணத்தை உயர்த்தி ஆணையிடும்படியும், வாகனங்களுக்கு (Insurance) காப்பீடு புதுப்பித்தலின் சமயத்தில் புகைச்சான்றிதழ் கட்டாயம் பெறவேண்டும் என கேட்டுக்கொண்டோம். அவர்களும் தக்க நடவடிக்கை எடுப்பதாக கூறினார்கள். ஆனால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறோம்.

LR.No.77915/C3/06 Dr02.01-2007 Circular No.01/07.-ன் படி வாகனப்பதிவு சான்றிதழில் பதிவு செய்யும்படியும் வேண்டிக்கொண்டோம். இந்த சுற்றறிக்கையின்படி அனைத்து வாகனங்களும் புகைச்சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். அவ்வாறு புகைச்சான்றிதழ் இல்லாத வாகனங்களின் தகுதிச்சான்றிதழ் மற்றும் வாகன பதிவு சான்றிதழ் தகுதியை இழந்து விடுகின்றது என்று தெரியவருகின்றது.

அவ்வாறு தெரியவரும்பொழுது தகுதி இல்லாத சான்றிதழுக்கு எப்படி வாகன காப்பீடு (Insurance) செய்ய இயலும்.

ஆகவே வாகன காப்பீடு (Insurance) புதுப்பிக்கும்பொழுது கட்டாயமாக தகுதியில் உள்ள புகைச்சான்றிதழைபெற்று காப்பீடு புதுப்பிக்க வேண்டும் என்று சுற்றறிக்கை அனுப்பும்படி தங்களை சிரம் தாழ்த்தி வேண்டிக்கொள்கிறோம்.

நன்றி

தலைவர்

இணைப்பு : LR.No.77915/C3/06 Dr02.01-2007 Circular No.01/07.